பதிவு எண்' M. 6311 ☆ தொலைபேசி! 551331 ☆ தந்தி! 1958 ☆ விலை 7 காசு ☆ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

'The Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ.

மலர்: 20] சென்னை: கார்த்திகை 6 (21—11—72) செவ்வாய் ... கார்த்திகை 7 (22—11—72) புதன் [இதழ்: 131

காய்கறிகள்--பதப்படுத்தப் புதிய முறை கண்டுபிடிப்பு

பம்பாய், நவ. 21—

உருளைக் கிழங்கு -- வெங்காயம் -- மாம்பழம் -- வாழைப் பழம் -- கோதுமை -- மீன் ஆகியவற்றைப் பதப்படுத்துவதற்கு ஒரு புதிய முறையைப் பம்பாயிலுள்ள பாபா அணு ஆராய்ச்சிக் கழகம் கண்டு பிடித்திருக்கிறது.

"கதிரியக்க முறையில் இவற்றைப் பதப்படுத்தினல் சுமார் 2 ஆண்டுகள் வரையில் கெடாமல் இருக்கும்" என்று இங்குள்ள விஞ்ஞானிகள் தெரிவித்திருக்கின்றனர்.

விபரீத யோசனைக்கு டில்லியும் ஆதரவா?

விளைவு அறியாமல் சி. சுப்பிரமணியம் புரியும் விஷமம்!

மதியழகன் யோசனை-மக்களவைக்கு கூறப்படுமானல் ஏற்பீரோ?

முதலமைச்சர் கலைஞர் அறைகூவல்

மாஞம்பதி, நவ. 20—

தி.மு. கழக அரசை எப்படியாவது கவிழ்த்துவிடலாம் என்று கனவு கொண்டிருக்கும் மத்திய அமைச்சர் சி. சுப்பிரமணியம், தமிழகச் சட்டமன்றத் தலைவர் மதியழகன் கூறிய யோசனையை ஆதரிக்க முனைந்திருப்பது பற்றி முதல்வர் கலைஞர், மாஞம்பதியில் நடந்த கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

"'தமிழகச் சட்டமன்றத்தைக் கலைத்துவிட்டு மறு தேர்தலுக்கு நிற்க வேண்டும்' என்று மதியழகன் கூறிய யோசனையை ஏற்பதுதான் முறையென்றால், அடுத்து நாடாளுமன்றத்திற்கும் அது பொருந்தாதா?" என்று கலைஞர் வினவினார்.

"நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு மறு தேர்தலுக்கு நிற்கும்படி மக்களவைத் தலைவர் தில்லான் யோசனை கூறினல் ஏற்றுக்கொள்வீர்களா?" என்று முதல்வர் கலைஞர் கேட்டார்.

செங்கற்பட்டு மாவட்டம் மாஞம்பதியில் பேரறிஞர் அண்ணா சிலைத் திறப்புவிழா--பொதுக்கூட்டத்தில் பேசுகையில் கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:—

"சனநாயகத்தில் ஒரு தேர்தல் நடந்து அமைக்கப்பட்ட ஆட்சிக்கு ஐந்தாண்டுக் காலம் தவணை தரப்படுகிறது; ஆட்சி நடத்த உத்தரவாதம் கொடுக்கப்படுகிறது.

சென்ற முறை வெற்றி பெற்ற தி. மு. கழகம் நான்காண்டுக் காலத்தில் சட்டமன்றத்தைக் கலைத்துவிட்டு மீண்டும் தேர்தல் நடத்தி அதிக பலத்துடன் வெற்றி பெற்று வந்தது.

1971ல் நடத்தியதைப் போலவே, 1972-லும் சட்டமன்றத்தைக் கலைத்துவிட்டு மறு தேர்தல் நடத்தும்படி யோசனை கூறுகிறார்கள்.

'ஊழல் புகார்ப் பட்டியல் கொடுக்கப்பட்டிருக்கிறது; இந்த ஆட்சிமீது மக்கள் நம்பிக்கை இழந்துவிட்டார்கள்; எனவே, மறு தேர்தல் நடத்த வேண்டும்" என்கிறார்கள்.

இதேபோல அவர்கள் கோரிக்கையை ஏற்று, 1972-லும் மறுதேர்தல் நடத்தி வெற்றி பெற்று வந்தால், மீண்டும் 4 பேர் புகார்ப் பட்டியல் கொடுத்ததற்காக மீண்டும் சட்டமன்றத்தைக் கலைக்க வேண்டுமென்றால், இந்தமாதிரி பைத்தியக்காரத்தனமான ஆட்டங்களுக்கெல்லாம் வளைந்து கொடுக்க முடியுமா?

மதியழகன் யோசனையை மத்திய அமைச்சர் சுப்பிரமணியம் சென்னையில் ஆதரித்துப் பேசியிருக்கிறார்; நான் அவரைக் கேட்கிறேன் -- தமிழ்நாட்டில் சட்டமன்றத் தலைவர் சொன்னதுபோலவே, மக்கள் சபையைக் கலைத்துவிட்டு மறு தேர்தல் நடத்த வேண்டும்' என்று மக்கள் சபைத் தலைவர் தில்லான் கூறினல், சி. சுப்பிரமணியம் ஏற்றுக்கொள்வாரா?

இதையெல்லாம் பார்க்கும் போது, தலைமையமைச்சருக்குத் தெரியாமலேயே இது போன்ற காரியங்கள் நடக்கின்றன என்றுதான் தோன்றுகிறது.

மற்ற மாநிலங்களில் இருப்பது போல் மத்தியில் உள்ள காங்

(4-ம் பக்கம் பார்க்க)

'கிருஷ்ணகிரி'யார் காட்டும் நன்றி

மாஞம்பதி, நவ. 21—

"மத்திய அமைச்சர் சி. சுப்பிரமணியம், திடீரென்று கழக ஆட்சியை 'ஊழல் ஆட்சி -- இலஞ்சலாவண்ய ஆட்சி' என்கிறார்; கிருஷ்ணகிரித் தேர்தலில் போட்டியிட்ட போது, அது அவருக்குத் தெரியவில்லை!

'நன்றிக்கும் - தமிழ்நாட்டிலிருக்கின்ற மனிதர்களுக்கும் வெகு தூரம் என்பதைத் தெரிந்துதானே என்னவோ திருவள்ளுவர், 'நன்றி மறப்பது நன்றன்று' என்று எழுதி வைத்தார்.

"இன்று அதற்கு அவர்கள் மாற்றுப் பொருள் கொள்கிறார்கள் -- நன்றி மறப்பது நன்று அன்றோ' என்று!"

--முதலமைச்சர் கலைஞர்
(மாஞம்பதி கூட்டத்தில்)

பாழாய்ப்போனவர் பட்டியலில் கழகத்தை இணைப்பதா?

மாஞம்பதி நவ. 21—

"மதியழகன், அவைத் தலைவர் பொறுப்பிலிருந்து கொண்டு, 'கருணாநிதி - நான் உனக்கு உற்ற தோழனல்லவா -- முப்பதாண்டுக் காலம் பழகியிருக்கிறோமல்லவா -- ஆகவே, நட்புரிமையின் அடிப்படையில் என்னுடைய யோசனையைக் கேள்; உடனடியாகச் சட்டசபையைக் கலைத்துவிட்டு மறு தேர்தல் நடத்து; 1971-ல் தேர்தல் நடத்தினாய் -- அதைப்போலவே மறுபடியும் இப்போது 1972 கடைசியிலும் தேர்தல் நடத்து' என்று யோசனை சொன்னார்.

"அவருடைய யோசனைகளைக் கேட்டுப் பாழாய்ப்போன நண்பர்கள் பலர் உண்டு; அந்தப் பட்டியலில் நம் கழகத்தை இணைக்க நான் விரும்பவில்லை; 'இணைப்பதால் கழகம் பாழாய்ப் போய்விடுமா' என்பது வேறு விஷயம்!"

---முதலமைச்சர் கலைஞர்
(மாஞம்பதி கூட்டத்தில்)

'யாரைப் பார்த்து ஊழல் குற்றம் சாட்டுகிறீர்'

'பின்னணியில் நடந்தது என்ன என்பது எங்களுக்கும் தெரியும்'

'புரட்சி'யாரின் புதிய வேடம் அம்பலம்

சென்னை, நவ. 21—

"எம். ஜி. ஆர். அவர்களே -- நீங்கள் இந்த நாட்டிலே யாரைப் பார்த்து ஊழல் குற்றச்சாட்டைச் சொல்கிறீர்கள் – எண்ணிப் பாருங்கள்; இந்த நாட்டு மக்களுக்காக – ஏழைச் சமுதாயத்திற்காக – அடித்தளத்திலே வாழ்கின்ற பாமரர்களுக்காக அல்லும் பகலும் அயராது உழைக்கும் எங்களைப் பார்த்தா இலஞ்சம் – ஊழல் என்று முழக்கமிடுகிறீர்கள்!

குடிசைகள் இருந்த இடத்தில் மாடி வீடுகள் – இந்தியா முழுவதும் நடைபெறுகின்ற ஆட்சியில், தமிழகத்தில்தான் இதைப் போன்ற திட்டங்கள் தீட்டப்படுகின்றன; கிராமங்கள் முழுவதும் மின்சாரம் வழங்கப்படுகிறது.

கோஷம் போடுவதன்மூலம் – அர்த்தால் செய்வதன்மூலம் – கலாட்டா செய்வதன்மூலம் – கல்லெறிவதன்மூலம் ஓர் ஆட்சியை மாற்றிவிட முடியும் என்று கருதுகிறீர்?

"ஊர்வலத்தில் ஏராளமான மக்கள் வந்தார்கள்; ஆகவே, இராஜினாமா செய்ய வேண்டும்" என்று கூறுகிறீர்.

மதுரையில் காங்கிரசு மாநாடு நடைபெற்றபோதுகூட, இலட்சக் கணக்கில் கூட்டம் வந்தது; ஆகவே, 'இராஜினாமா செய்ய வேண்டும்' என்று காமராசர்கூட கேட்கவில்லையே!

உங்கள் தொண்டர்கள் என்ன செய்கிறார்கள் -- பஸ்கள் மீது கல் வீசுகிறார்கள்; கார்கள் மீது கல்லெறிகிறார்கள்; அமைச்சர்களின் கார்கள் மீது கல்லெறிகிறார்கள்; அமைச்சர் பேசும்போது அவர் மீது கல்லை எறிந்து காயப்படுத்தி இரத்தம் கொட்டச் செய்கிறார்கள்.

அமைச்சர்கள்மீது கல்லெறிவதன் மூலமும்-கார்கள், பஸ்களின் மீது கல்லெறிவதன் மூலமும் ஒரு ஆட்சியை மாற்றமுடியும் என்று கருதுகின்ற ஒரு அரசியல் தலைவரை இன்று தமிழகத்தில் பார்க்கவேண்டிய நிலைமை இருப்பது விசித்திரம்தான்!

நடந்தது எல்லாம் எங்களுக்குத் தெரியும்; 'புரட்சித் தலைவர்' ஏன் இப்படிப் பேசுகிறார் என்பதும் புரியும்; டெல்லியிலிருந்து வந்த இரு குட்டி அமைச்சர்கள் உங்களை எங்கெங்கே சந்தித்தார்கள் -- என்னென்ன ஆசை வார்த்தைகளைக் காட்டினார்கள் -- வருமான வரி இலாகா உங்களுக்கு என்ன என்ன தாக்கீதுகளை அனுப்பியது -- இறுதியாக என்ன ஆயிற்று -- அத்தனையும் எல்லாம் எனக்குத் தெரியும்.

இன்னொரு இலாகா உங்களுக்குப் பின்னாலே உலகம் சுற்றியது; உங்களுக்குப் பின்னாலே உலகம் சுற்றி என்னென்ன விசாரணை மேற்கொண்டது -- உங்களுக்கு எழுத்து மூலமாக என்ன அனுப்பியது -- அதுவும் எனக்குத் தெரியும்!

அதற்காக நீங்கள் எங்களை வீண் பழிக்கு ஆளாகும் வகையில் காட்டிக்கொடுக்கலாமா? காட்டிக்கொடுத்தால் தமிழகம் உங்களை மன்னிக்குமா? 4 கோடி தமிழ்ச் சமுதாயம் உங்களை மன்னிக்காது -- மன்னிக்காது!"

---அமைச்சர் செ. மாதவன்
(சென்னை—தேனம்பேட்டை கூட்டத்தில்)

அபயம் கேட்டவர் அழித்துவிட முனைகிறார்

"அந்தமான் தீவிலிருந்து நாடாளுமன்றத்துக்குப் போட்டியிடுகிறேன்; எனக்கு அபயம் அளிக்க வேண்டும்' என்று தந்திக்குமேல் தந்தி எங்களுக்குக் கொடுத்து -- 'எனக்கு ஆதரவு கொடுங்கள்' என்று வேண்டி -- அந்தமான் தி. மு. கழகத்தினர் மறுத்தும்கூட, 'நீங்கள் அவருக்கு ஆதரவு கொடுங்கள்' என்று அவர்களுக்கு இங்கிருந்து நாங்கள் கூறி -- அதன் பிறகு கழக ஆதரவைப் பெற்று வெற்றி பெற்றார் கே. ஆர். கணேஷ் என்பவர்!

"அவர் இன்று, 'தமிழ்நாட்டிலே தி. மு. கழகத்தை அழித்துவிட்டுத்தான் மறு வேலை பார்ப்போம்' என்று அடிக்கடி தமிழ்நாட்டுக்கு வந்து கொண்டிருக்கிறார்!

'அவருடைய வருகையின் நோக்கம் என்ன என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்."

-- முதலமைச்சர் கலைஞர்
(மாஞம்பதி கூட்டத்தில்)

புரட்சியாரின் புதிய குற்றச்சாட்டு!

யாரோ சிலர் இரண்டு டாக்சிகளில் வந்து, 'எம். ஜி. ஆர். வீடு எங்கே' என்று விசாரித்துவிட்டுப் போனார்களாம்!

விசாரித்தால் என்ன?

அப்படி விசாரித்தவர்கள், தன்னைக் கொலை செய்யத்தான் வந்தார்கள் என்று கதைக்கிறார் புரட்சித் தலைவர்!

இதற்கு அவர் கூறும் ஆதாரம் :—

"எம்.ஜி.ஆர். அலுவலகம் எது என்று எல்லோருக்கும் தெரிந்ததுதான்; ஆனாலும், அவர்கள் விசாரித்திருக்கிறார்கள்."

என்னய்யா இது? எம். ஜி. ஆர். வீடு எல்லோருக்கும் தெரிந்து [illegible] கவேண்டும் -- தெரியாதவர்களே நாட்டில் இருக்கக் கூடாது -- அப்படித் தெரியவில்லை என்றாலும், யாரையும் விசாரிக்கக் கூடாது என்கிறாரா?

எவ்வளவு பெரிய மனிதரானாலும் -- அலுவலகமானாலும், தேடிவருபவர்கள் அனைவருக்கும் தெரிந்துதான் இருக்கவேண்டும் என்று எப்படிச் சொல்லமுடியும்?

சென்னையில் இருப்பவர்கள் எல்லோருக்குமே எம் ஜி.ஆர். வீடு தெரியுமா? வீட்டு எண்—தெருவின் பெயர் ஆகியவை தெரிந்திருந்தால்கூட, 'அந்த நம்பர் வீடு எங்கே' என்று மற்றவர்களைக் கேட்டு விசாரிப்பது இல்லையா?

எம்.ஜி.ஆர். வீடு எங்கே இருக்கிறது என்று தெரியாதவர்கள் சென்னையிலேயே பலர் இருப்பார்கள் என்றால், வெளியூர்க்காரர்களுக்கு எப்படித் தெரிந்திருக்க முடியும்?

டாக்சியில் வந்தவர்கள் ஒருவேளை வெளியூர்க்காரர்களாகவும் இருக்கலாம் அல்லது உள்ளூர்க்காரர்களாகக்கூட இருக்கலாம் -- இதில் என்ன மர்மம் இருக்கிறது?

அவர் இன்னும் சொல்கிறார் :—

"நான் விமானநிலையம் சென்று வந்த பிறகு இது நடந்திருக்கிறது; அவர்கள் எப்படி ஏன் வந்தார்கள் -- எப்போது வந்தார்கள் -- புதிதாக சென்னைக்கு வந்தவர்கள் யார் -- இவைகளைப் போலீஸ் அதிகாரிகள் விளக்கவேண்டும்"

எப்படி -- புரட்சியாரின் கேள்விகள்?

எம் ஜி.ஆர். வீட்டுக்கு எத்தனையோ பேர் காரிலும், டாக்சியிலும் வந்து போகக்கூடும்; அதுவும், புதுக் கட்சி ஆரம்பித்து மாபெரும் புரட்சித் தலைவராக மாறியிருக்கின்ற இந்தநேரத்தில் கேட்கவா வேண்டும்?

வீட்டைப் பற்றி விசாரித்ததனாலேயே, வந்தவர்கள் தன்னைக் கொலை செய்யத்தான் வந்தார்கள் என்று குற்றஞ்சாட்டிவிடுவதா? வந்தவர்கள் புதுக் கட்சிக்கு ஆதரவாளர்களாக இருந்திருக்கக்கூடாதா?

வெளியூர்களிலிருந்து வந்தவர்களாகத்தான் இருக்கட்டும்; வீட்டை விசாரித்து அறிந்துகொண்டு, 'நாளை வரலாம்' என்று கூடத் திரும்பியிருக்கலாம். 'இரவு நேரத்தில் நம் தலைவரைப் பார்க்க முடியுமோ என்னவோ -- ஏன் தொந்தரவு செய்ய வேண்டும்' என்று எண்ணிக்கூட அவர்கள் திரும்பியிருக்கக்கூடும்!

இரவில் டாக்சியில் வந்து வீட்டை விசாரிப்பதே கொலைக்குற்றச்சாட்டுக்குரிய செயல் என்றால், எப்படி நம்புவது?

வந்தவர்கள்மீது சந்தேகத்துக்குரிய வேறு ஏதேனும் தகவல் இருக்குமானால், உடனடியாகப் போலீசுக்குத் தெரிவித்திருக்கலாம். கையில் ஏதேனும் ஆயுதங்கள் இருந்தன என்றோ, 'கொலை செய்வதற்கான முயற்சியில் அவர்கள் ஈடுபடக்கூடும் என்ற சந்தேகம் தோன்றியது' என்றோ, எம்.ஜி.ஆர். கூறவில்லை.

பத்திரிகை நிருபர்களைக் கூட்டி வைத்துக்கொண்டு இந்தக் குற்றச்சாட்டைக் கூறியிருக்கிறார்; பத்திரிகைக்காரர்களுக்கும் இப்படிப்பட்ட செய்தி தானே தேவை!

பரபரப்புச் செய்திப் பத்திரிகைகளுக்கு நாள்தோறும் 'விஷய தானம்' செய்யும் பொறுப்பைப் புரட்சித் தலைவரே ஏற்றுக்கொண்டுவிட்ட பிறகு, இத்தகைய செய்திகளுக்கு ஏது பஞ்சம்?

எப்படித்தான் இப்படிப்பட்ட கற்பனைகள் புரட்சித் தலைவர் மூளையில் உதிக்கின்றனவோ! கற்பனைச் சுரங்கமாக அல்லவா இப்போதெல்லாம் அவர் விளங்குகிறார்!

அவர் இன்னும் பேசியுள்ள வசனங்களையும் படித்து ரசியுங்கள் :—

"இலட்சோபலட்சம் தொண்டர்களை ஒருவர்கூட இல்லாமல் அழித்தால், ஒருவேளை இந்த இயக்கம் தற்காலிகமாக மறையலாம்; கடைசியாக ஒன்று கூறுகிறேன் -- நாங்கள் அவர்களைப் போன்ற கொலைஞர்களின் கையால் கொலை செய்யப்படுவதை வரவேற்கிறோம்' என்று!

எப்படி வசனம்? இப்படியெல்லாம் பேசி, தி. மு. கழகத்தின்மீது கொலைக்குற்றமும் சாட்டிக் கூண்டில் நிறுத்தலாம் -- மக்களின் அனுதாபத்தைப் பெறலாம் என்று நினைக்கிறார் புதிய அரசியல் கதாநாயகர்!

அர்த்தாலில் எதிர்பார்த்தபடி எதுவும் நடக்கவில்லை; அடிதடி -- துப்பாக்கிப் பிரயோகங்கள் நடக்கும்; நாலைந்து இடங்களிலாவது பிணங்கள் விழும் என்று நினைத்தார் -- எதுவும் நடக்கவில்லை!

இப்போது, 'இதோ கொலை முயற்சி—அதோ கொலை முயற்சி' என்று குற்றஞ்சாட்ட ஆரம்பித்திருக்கிறார்.

'மனோகரனின் உயிர் நிலையைத் தாக்கினார்கள்—நெஞ்சிலே குத்தினார்கள்—கொலை செய்ய முயன்றார்கள் -- காரில் ஏறிக்கொண்டு மறைந்துவிட்டார்கள்' என்றெல்லாம் செய்தியாளருக்குச் செய்தி கொடுக்கிறார்.

மனோகரன் டில்லியில் சென்று நின்றுகொண்டு நிருபர்களிடம் தன்னைக் கொலை செய்ய முயன்றதாகக் கூறுகிறார்! இவர் இங்கே நிருபர்களைக் கூட்டி வைத்துக்கொண்டு கூறுகிறார்!

மனோகரன் இன்னும் ஒரு படி மேலேபோய் நாடாளுமன்றத்திலும் உரிமைப் பிரச்சினை எழுப்பியிருக்கிறார்.

விமான நிலையத்தில் என்ன நடந்தது என்பது நமக்குத் தெரியாது; அங்கு ஏதோ அசம்பாவிதம் நடந்துவிட்டதாகக் கூறப்பட்ட செய்திகேட்டு முதல்வர் கலைஞர் உடனடியாகக் கண்டனம் தெரிவித்திருக்கிறார்; அதற்குமேல் யார் என்ன செய்ய முடியும்?

விமான நிலையம் என்பது ஜனசஞ்சாரமே இல்லாத வனாந்திரத்தில் இருக்கும் இடமல்ல; மீனம்பாக்கம் விமான நிலையத்தில் -- அதுவும் காம்பவுண்டுக்குள் இப்படி ஒரு சம்பவம் நடந்திருக்குமானால், அது தாக்கியவர்களுக்கும் -- தாக்கப்பட்டவர்களுக்கும் மட்டுமே தெரிந்திருக்கக் கூடிய ஒன்றல்ல; அங்கு இன்னும் எவ்வளவோ பயணிகளும், பயணிகளை வழியனுப்ப வந்திருப்பவர்களும் இருந்திருக்கக்கூடும்; போலீசாரும்--காவலாளிகளும் -- ஏனைய சிப்பந்திகளும் அங்கு உண்டு; அவர்கள் யாருக்குமே தெரியாமல் இப்படி ஒரு சம்பவம் நடந்திருக்க முடியாது.

உடன் சென்ற கே. ஏ. கிருஷ்ணசாமியும் -- விமான நிலையச் சிப்பந்திகளும் மனோகரனைக் காப்பாற்றி அழைத்துச் சென்றதாகக் கூறப்படுகிறது; அந்த நேரத்தில் மற்றவர்களெல்லாம் வேடிக்கை பார்த்துக்கொண்டா இருந்தார்கள்? தாக்கியவர்களைத் தடுத்துப் பிடித்திருக்கலாம் அல்லது அவர்கள் ஏறிச் சென்ற காரின் அடையாளத்தை -- நம்பரைக் குறித்து வைத்துக்கொண்டு போலீசில் புகார் செய்திருக்கலாம்; இதில் எதுவும் நடைபெற்றதாகத் தெரியவில்லை.

என்னவோ, புரட்சித் தலைவர் கூறுகிறார்—நம்மையெல்லாம்விட அவர் பொறுப்புள்ள பெரிய மனிதர்; அவருக்குச் சமமான பொறுப்புள்ள தலைவர் மனோகரன்; இந்த இருவர் கூற்றிலும் உண்மை இல்லாமல் இருக்குமா என்று பொது மக்கள் நம்பக்கூடும்.

முன்பு ஈ. வி. கே. சம்பத் நமது கழகத்திலிருந்து பிரிந்தபோது இப்படித்தான் ஊர் ஊராகச் சென்று சொல்லிக் கொண்டிருந்தார் -- 'வேலூர் பொதுக்குழுவில் எம். ஜி இராமச்சந்திரனும், எஸ். எஸ் இராசேந்திரனும் என்னைத் தாக்கினார்கள் -- கொலை செய்ய வந்தார்கள்' என்று!

சம்பத் அன்று சொன்னது உண்மை என்றால், எம். ஜி. இராமச்சந்திரன் இன்று சொல்வது உண்மையாக இருக்கலாம்; நெஞ்சில் கை வைத்து -- மனச்சாட்சிக்குப் பயந்து எதையும் பேசவேண்டும்.

குற்றஞ்சாட்டுவதோ, புகார் கூறுவதோ பெரிய காரியமல்ல; யார்மீது யார் வேண்டுமானாலும் நினைத்த மாத்திரத்திலேயே எப்படிப்பட்ட பழியையும் சுமத்திவிடலாம்; அது உண்மைதான் என்று மற்றவர்கள் நம்பத் தகுந்த ஆதாரங்கள் இருக்க வேண்டும்.

பத்திரிகையில் போட நிருபர்கள் இருக்கிறார்கள் என்பதற்காகவே வாயில் வந்ததையெல்லாம் சொல்லி வைப்பது அரசியல் நாகரிகமாகாது!

அரசியல் காழ்ப்புணர்ச்சியின் காரணமாகவே இப்படிப்பட்ட புகார்களை, நாள் தவறாமல் புதிது புதிதாகப் பத்திரிகை நிருபர்களிடம் சொல்லிக் கொண்டிருப்பதும், அத்துடன் தி. மு. கழகத்தையும் தொடர்புபடுத்திக் குற்றஞ்சாட்டுவதும், நாணயமான அரசியல் வாதிக்கு அழகல்ல!

புரட்சித் தலைவரே -- புதிய அரசியல் கதாநாயகரே -- அறிஞர் அண்ணாவின் பெயரால் கட்சி நடத்த முனைந்துள்ள நீர், அண்ணா அவர்கள் நமக்கெல்லாம் கற்றுத் தந்த அரசியல் அறநெறியைக் கடைபிடிக்கவேண்டும்; அண்ணா பெயருக்கே களங்கம் கற்பிக்கும் செயல் வேண்டாம்!

— மா. சே.

சென்னையில் மாணவர் பேரணி

முதலமைச்சர் கலைஞர் துவக்கிவைத்து அறிவுரை

சென்னை, நவ. 20—

சென்னையிலுள்ள நகரப் பள்ளிகளின் சார்பில் 5,000 மாணவ -- மாணவியர் பேரணி ஒன்று நேற்று நேரு விளையாட்டு அரங்கில் நடைபெற்றது.

இப்பேரணியை, முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

என்.சி.சி. மாணவர்களின் அணிவகுப்பு மரியாதையை முதலமைச்சர் ஏற்றுக் கொண்டார்.

மேயர் ஆர். ஆறுமுகம் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

பள்ளிக் கல்வி இயக்குநர் சிட்டிபாபு, மாநில இளைஞர் பேரணி நிறுவனக் குழுவின் சார்பில் இளைஞர் பேரணிகள் நடத்துவதற்காக அரசாங்கம் ரூ. 97,000 வழங்கியிருக்கிறது என்று தெரிவித்தார்.

மாணவ -- மாணவியர் பல்வேறு உடற் பயிற்சிகளைச் செய்து காட்டினர்; தென் சென்னை மாணவிகள், இந்தியாபோல் அமர்ந்து ஆடிய நடனம் சிறப்பாக இருந்தது.

மாணவர்கள் தொடர் ஓட்டமாகக் கொண்டுவந்த தீபம் ஏற்றப்பட்டது.

இந்தியாவின் விடுதலை நாள் வெள்ளி விழாவையொட்டி இந்தப் பேரணி நடந்தது.

பேரணியைத் தொடங்கிவைத்து முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"மாணவ -- மாணவிகள், கல்வி அறிவுடன் உடல் வலிவும் பெற வேண்டும்.

இப்படிப்பட்ட பேரணிகளில் கலந்து கொள்வதன்மூலம் உடல் வலிவைக் காட்ட இயலும்.

எதிர் காலத்தில் நீங்கள் இந் நாட்டை வாழ்விக்க--வளமாக்க உறுதியுடன் பணியாற்ற வேண்டும்."

ஆசிரியர்கள் நியமனம்

ஊராட்சி ஒன்றியங்களின் ஆணையருக்கு அரசு உத்தரவு

திருச்சி, நவ. 20—

"ஊராட்சி ஒன்றியங்களில் ஆசிரியர்களை நியமிக்கும்போது தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு 18 சதவிகிதம் -- பிற்பட்ட வகுப்பினருக்கு 41 சதவிகிதம் என்ற சட்டபூர்வமான ஒதுக்கீட்டைக் கண்டிப்பாக பின்பற்ற வேண்டும்"

என்று, ஊராட்சி ஒன்றியங்களின் ஆணையர்களுக்கு அரசு தாக்கீது ஒன்று அனுப்பியுள்ளதாகத் தெரிகிறது.

'மதியழகனின் கோணங்கித் தனத்தைக் கண்டும் டில்லி வாய்மூடிக் கிடப்பது ஏன்?

'சபாநாயகரின் விஷமத்துக்குப் பரிகாரமா[illegible]ச் சட்ட நடவடிக்கை எடுக்கத் தயக்கம் ஏன்[illegible]?'

'கட்சி சார்புடன் நடந்துகொண்டவரை அகற்றத் தேவையான அதிகாரம் இப்பொழுதே இருக்கிறது'

'இந்துஸ்தான் டைம்ஸ்' இதழ் கண்டனமும் கருத்தும்

"சில ஆண்டுகளுக்கு முன் தலைமை நீதிமன்றம், பஞ்சாப் மாநிலத்தில் ஏற்படுத்[illegible]ப் பட்ட நெருக்கடியையொட்டி அளித்த தீர்ப்பானது, தமிழ்நாடு சட்டப் பேரவை[illegible]த் தலைவர் மதியழகனைக் கண்டிக்கவும், அவசியமானால் 'அசாதாரண' சட்ட நடவ[illegible]க்கைகள் மூலம் அவரை அகற்றவும் தேவையான அதிகாரத்தை அளித்துள்ளது.

"இத்தகைய நடவடிக்கைக்குக் குறைவாக வேறெந்த நடவடிக்கையும் நிலைமை[illegible]த் திருத்தப் போதுமானதாக இருக்காது"

என்று, 'இந்துஸ்தான் டைம்ஸ்' என்ற ஏடு, 17-11-72-ம் நாளன்று எழுதியுள்ள கட்டுரையில் [illegible] டிக்காட்டிக் குறிப்பிட்டிருக்கிறது; அக்கட்டுரையில் மேலும் கூறியிருப்பதாவது :—

"சென்னை -- கோவை -- மதுரை ஆகியவற்றிலும் இதர நகரங்களிலும் நடந்துள்ள அர்த்தால், ஏமாற்றக் கூடியதாக இருக்கலாம்; அல்லது ஏமாற்றுவதாகவும் இருக்கலாம்; ஆனால், தொடர்ந்து பதவியில் நீடிக்கக் கழக அரசுக்கு உள்ள மக்கள் ஆதரவைப் பற்றி இதிலிருந்து கணித்துவிட முடியாது என்பதை உறுதியாகக் கூறலாம்.

பலருக்கு 'பந்த்' பொழுது போக்காகிவிட்டது; 'பந்த்' என்றால், 'கூடுதலாக ஒருநாள் விடுமுறை' என்றாகிவிட்டது; இன்னும் பலருக்குப் போக்குவரத்துச் சாதனங்கள் இல்லாமையால் அலுவலகங்களுக்குச் செல்ல முடிவதில்லை; இன்னும் சிலர், 'எங்கே தெருவுக்குச் சென்றால் வன்முறை ஏதும் நிகழுமோ' என்று அஞ்சி அவரவர் வீடுகளிலேயே இருந்துவிடுகின்றனர்; 'பந்த்' வெற்றி பற்றி எண்ணும்போது, இந்த உண்மைகளையெல்லாம் மனத்தில் கொள்ள வேண்டும்.

ஒரு 'பந்த்' உண்மையிலேயே வெற்றி பெற்றதாகவே வாதத்துக்காக வைத்துக் கொண்டாலும், அரசியல் உரிமைச் சட்டத்தின்படியோ அல்லது நாடாளுமன்ற சனநாயகத்தின்படியோ அந்த 'வெற்றி' நிரூபித்து விடுவதில்லை என்பதை, 'திரு. கருணாநிதி இராஜினாமா செய்ய வேண்டும்' என்று எதற்கெடுத்தாலும் -- எப்போதும் கூறத் துடிப்போர் கருத்தில் கொள்வது நல்லது!

கட்சி சார்புடன் நடந்துகொண்ட ஓர் அவைத் தலைவரின் தவறான ஒத்திவைப்புக்குப் பிறகு, தமிழ்நாட்டுச் சட்டமன்றத்தின் இக்கூட்டத் தொடரையே கலைத்து ஆளுநர் உத்தரவிட்டிருக்கிறார்.

சட்டமன்றத்தை மீண்டும் கூட்டி, இயல்பாக அது செயல்படச் செய்ய அவசரமாக வழிமுறைகள் கண்டாக வேண்டும்.

டில்லியில் உள்ள பொறுப்பான தலைவர்[illegible]கள், தமிழ்நாடு சட்டப்பேரவைத் தலைவர் ம[illegible]யழகனின் இயல்பு மீறிய 'கோணங்கி'[illegible]தனத்தைக் கண்டும் வாயை மூடிக் கொண்டி[illegible]ருப்பது விசித்திரமாக இருக்கிறது!

ஒரு மாநில சட்டமன்றத்தின் 'சுயா[illegible]த்திய' உரிமையைக் கௌரவிக்க வேண்[illegible]மென்ற உன்னத நோக்கு காரணமாக அப்[illegible] மௌனம் சாதிக்கிறார்கள் போலும்!

எனினும், சனநாயக நாடாளுமன்ற நடைமுறைக்கு எதிராக இம்மாதிரி நடந்துள்ள வெளிப்படையானதொரு வக்கிரச் செயல் பகிரங்கமாகவும் -- வன்மையாகவும் கண்டிக்கப்படாமல் இருப்பது வேதனை அளிப்பதாக இருக்கிறது.

அவைத் தலைவர் தாமே உருவாக்கிய விஷமத்தைத் திருத்திடும்படி அவரை மனமாற்றமடையச் செய்ய இயலவில்லையென்றால், வேறு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு—மாநிலத்து மக்களுக்கு சட்டமன்றம் செய்ய வேண்டிய கடமைகளை நிறைவேற்றி—சட்டமன்றம் இயல்பான வகையில் இயங்கிடச் செய்தாக வேண்டும்.

'உணர்ச்சிகள் அடங்கட்டும்' என்று இந்த நடவடிக்கையை எடுக்காமல் காத்திருப்பது வீண் வேலையாகும். தாங்கள் கண்டிப்பான நடுநிலை வகிப்பதாக எண்ணி மத்திய அரசில் இருப்பவர்கள் கவலைப்படாமல் இருந்துவிட முடியாது. மதியழகன் செய்துள்ள காரியம் நாடாளுமன்ற முறை முழுவதற்கும் இழைக்கப்பட்டுள்ள அவமதிப்பாகும்.

நாடாளுமன்ற சனநாயக முறைக்கு பிறரைப் போலவே மத்திய அரசும் பாதுகாவலனாகும். சட்டமன்றங்களில் பெரும்பான்மை என்பது சட்டமன்றங்களுக்குள்ளேதான் தீர்மானிக்கப்பட முடியுமே அல்லாமல் தெருக்களில் தீர்மானிக்கப்பட முடியாது!"

'மதியழகன் பதவி விலகுவதே நல்லது'

'தவறான தனது செயலுக்கு மேலும் விளக்கம் கூறிக் கொண்டிருப்பது முறையல்ல'

'ஸ்டேட்ஸ்மன்' ஏடு கண்டனம்

தமிழகச் சட்டப் பேரவைக் கூட்டத்தைக் காரணமின்றி மூன்று வார காலம் தள்ளி வைத்துவிட்டுத் தமது செயலுக்கு நியாயம் கற்பிக்க முயலும் மதியழகனின் சட்ட விரோத -- சனநாயக விரோதப் போக்கினைக் கண்டித்த, 'ஸ்டேட்ஸ்மன்' ஏடு கருத்தறிவித்துள்ளது, அது வருமாறு :—

"சட்டமன்றக் கூட்டத் தொடரைக் கலைத்ததையடுத்து, தமிழ்நாடு சட்டமன்றத் தலைவர் கே. ஏ. மதியழகன், தமது நடத்தைக்கான காரண[illegible]ளாக்கியிருக்கிறார்; ஆனால் அது ஏற்றுக்கொள்ளத் தக்கதாக இல்லை. தமிழகத்தில் நிகழ்ந்துள்ளவை, நான்காண்டுகட்குமுன், மேற்கு வங்கத்தில் ஏற்பட்ட நெருக்கடிக்கு ஒப்பானதாக இருக்கிறது; 1968-ல் மேற்கு வங்க ஐக்கிய முன்னணி அரசு பெரும்பான்மையை இழந்துவிட்ட நிலையில் -- பலப்பரீட்சையைத் தள்ளிப் போட்டுத் தாமதப்படுத்தி வந்த நேரத்தில், அந்தச் சட்டமன்றத் தலைவர் பிஜோய் பானர்ஜியின் செயல், விளக்கம் கூற முடியாத ஒன்றாக இருந்ததென்றால், திரு மதியழகனின் செயல் அதைக் காட்டிலும் மோசமானதாகும்; ஏனெனில், அவரால் கட்டுண்டு இருக்கும்படிச் செய்யப்பட்டுள்ள தமிழக அரசு, சட்டமன்றத்தில் மிகப் பெரும்பான்மை பலத்தைப் பெற்ற ஓர் அரசு என்பதை அவரே நன்கு அறிவார்.

தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஏற்பட்டது போன்றதோர் முட்டுக்கட்டை நிலை தீர, உணர்ச்சிகள் அடங்கும்வரை குறுகிய காலத்துக்கு அவைக் கூட்டத்தை ஒத்திவைத்திருக்கலாம்; இது ஒன்றே தக்க தீர்வாக இருந்திருக்கும்.

இதை விடுத்து, அண்ணாதுரையின் அரசியல் தத்துவம் பற்றியும் பேசிவிட்டு மதியழகன், மூன்று வார காலத்துக்கு அவையை ஒத்திவைத்தது ஏற்க இயலாத ஒன்றாகும்.

அண்ணாவைப் பற்றி அவர் கூறியது பொருந்தாது; அவரது 'கட்சி விசுவாச'த்தையே அது காட்டியது; ஒரு முதல்வருக்குச் சட்டமன்றத்தில் உள்ளவர்களின் ஆதரவு மட்டும் இருந்தால் போதாது' என்று இடைச்செருகலாக ஒன்றைக் கூறியிருக்கிறார்; அவரது இந்தக் கூற்று வாதத்தின்முன் நில்லாது!

இவ்வாறெல்லாம் மதியழகன் சபாநாயகராக இருந்துகொண்டு பேசியிருப்பது, சபாநாயகர் பதவிக்கு நிலை விளக்கம் கூறுகின்ற புதியதோர் வேலையை அளிப்பதாக இருக்கிறது; ஆனால் அதற்கெல்லாம் சட்டத்தில் இடம் கிடையாது.

ஒரு சட்டமன்றத்தை அதன் இயல்புப்படி இயங்கச் செய்வதிலிருந்தே ஒரு சபாநாயகர் அவருக்குரிய அதிகாரத்தைப் பெறுகிறார் என்று பஞ்சாப் சிக்கல் பற்றி ஆராய்ந்த அவைத் தலைவர்கள் மாநாடு தெரிவித்தது.

அவையின் பெரும்பான்மை உறுப்பினர்களின் கருத்து மேலோங்கி நிற்கும்படிச் செய்வதே ஒரு சபாநாயகரின் கடமையாகும்; தன் சொந்தக் கருத்தைச் சட்டமன்றத்தின் கருத்துக்குப் பதிலாகத் திணித்துவிட முடியாது!

தன் விருப்புரிமை என்பதற்கு ஓரளவு இடமிருக்கிறது; ஆனால் இது அவையின் நடவடிக்கைகளுக்கு அப்பால் செல்லாது.

மேலும் மதியழகன் செய்தது போல், 'சட்டமன்றப் பெரும்பான்மை ஒன்றே தொடர்ந்து பதவியில் இருக்கப் போதுமானதல்ல என்ற அவரது ஆச்சரியப்படத்தக்க கோட்பாட்டைக் குறிப்பிடுவதற்காக முதல்வரின்

(4-ம் பக்கம் பார்க்க)

ஆச்சாரியாரின் கீழ்த்தரமான கருத்து

மானமுள்ள தமிழர்களுக்கு மனம் பதறாதா?

தந்தை பெரியார் கடும் கண்டனம்

"இன்றையத் தமிழர் போராட்டத்தைப் பயன்படுத்திக் கொண்டு நம்மை அழிக்க இராஜாஜி துணிந்து முன்வந்திருக்கிறார்; எனவே, நம்மவர்கள் ஏமாறாமல் இருக்க வேண்டும்.

இராஜாஜி அவர்கள் துணிந்து 'சுயராஜ்யா' என்ற பத்திரிகையில், ஓர் அறிக்கை! வெளியிட்டிருக்கிறார்; அதில் அவர் எவ்வளவு துணிவாக -- எவ்வளவு கீழ்த்தரமான கருத்தை வெளியிட்டிருக்கிறார்; இதில் சிறிதாவது மான அவமானம் -- நேர்மை -- யோக்கியம் என்பவைகளைப் பற்றிக் கவலைப்பட்டிருக்கிறாரா என்பதைக் கவனிக்க வேண்டும் :—

"தி. மு. க.-விலிருந்து விலகிப்போய் புதிதாகக் கட்சி தொடங்கியுள்ள 'அண்ணா தி. மு. கழகம்' அதிக பலம் பெற்றுவிட்டது; அதனால், தமிழ்நாடு முதல் மந்திரி கருணாநிதி இனி தனது சொந்த பலத்தில் பதவியில் தொடர்ந்து இருக்கமுடியாது; கருணாநிதியைத் தலைமையாகக் கொண்ட மந்திரி சபை நம்பிக்கையில்லா வாக்கெடுப்பின் மூலம் 'டிஸ்மிஸ்' செய்யப்படும் நிலைமை இருக்கிறது; இந்த நிலை ஏற்படாதபடி சட்டசபைக் கூட்டத் தொடர் ரத்து செய்யப்பட்டுவிட்டது; ஆதலால் தமிழ்நாடு சட்டசபையைக் கலைத்துவிட்டு ஜனாதிபதி ஆட்சியைக் கொண்டு வருவதைவிட வேறு வழியே இல்லை"

என்று எழுதி இருக்கிறார்; இப்படி அவர் எழுதியது யோக்கியமாகுமா? இதில் எது யோக்கியமான எழுத்து? அண்ணா தி. மு. க. பலம் பெற்றுவிட்டதா? அதில் இப்போது எத்தனை அங்கத்தினர்கள் இருக்கிறார்கள்? தி. மு. க.-விலிருந்து எத்தனைப் பேர் போய்விட்டார்கள்? 100-க்கு 10 சட்டசபை மெம்பர்கள் கூட விலகவில்லையே! சுமார் 200 பேர் உள்ள கூட்டணியில் ஒரு 10 பேர் விலகிவிட்டால், மீதி 190 என்பது அனைவருக்கும் தெரியுமே! கட்சி பலம் என்பது சட்டசபை மெம்பர் எண்ணிக்கையைத் தவிர வேறு எதைக் கொண்டு கணிப்பது? 'இந்த மந்திரி சபை வாக்கெடுப்பின் மூலம் 'டிஸ்மிஸ்' செய்யப்படும் நிலைமை இருக்கிறது' என்பதை எதைக்கொண்டு இவர் கணிக்கிறார்? சிறிதாவது புத்தி இருக்கிறதா?

கருணாநிதி அவர்களுக்கு எதில் பலம் குறைந்துவிட்டது? இன்று அவர் சொந்த பலத்தில் நிற்காமல் யார் பலத்தில் நிற்கிறார்? சட்டப்படி -- சம்பிரதாயப்படி -- அனுபவப்படி -- அவருக்கு எதில் பலம் குறைந்துவிட்டது?

சட்டசபையில் தி. மு. க. மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் வந்தால், எத்தனை உறுப்பினர்கள் அதற்கு ஆதரவாக ஓட்டு அளிப்பார்கள்?

சட்டசபையில், சபாநாயகர்மீது வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது ஓட்டு எடுத்திருந்தால் என்ன கதி ஆகியிருக்கும்? நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு ஆதரவாக 190 (தி. மு. க. 176 -- பா. பி. 7 -- முஸ்லிம் லீக் 6 -- த.அ.க. 1) ஓட்டு கிடைத்திருக்குமே -- ஒன்றாவது குறைந்திருக்குமா? சபாநாயகர் ஒத்திப்போட்டது தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்கு என்றும், இது யோக்கியமற்ற காரியம் என்றும் இந்தியாவில் உள்ள பிரபல பத்திரிகைகள் எல்லாம் எழுதி இருப்பதோடு மதியழகன் அவர்களை இவ்வளவு இழிமொழிகளால் இழித்துக் கூறியிருக்கின்றன என்பது இராஜாஜிக்குத் தெரியாதா?

இது, 'கருத்து வேறுபாடு' என்று சொல்லக்கூடியது அல்லவே -- 'யோக்கிய வேறுபாடு' என்றுதான் சொல்ல வேண்டும்.

இராஜாஜி அவர்கள் இந்த அற்பக் காரியத்திற்கு, இவ்வளவு கீழ்த்தரமாக -- யோக்கியமற்ற நிலைக்குப் போயிருக்கிறார்; எவ்வளவுதான் தம் இன நலத்துக்காகப் போனார் என்றாலும் -- பெண்டு பிள்ளையைக் காப்பாற்றத் திருடினார் என்றாலும் -- திருட்டு திருட்டுதானே? திருடன் திருடன்தானே? எம் ஜி.ஆர். நிலைமையினால் இவர் 'இவ்வளவுகீழ் நிலைமைக்குப் போய்விட்டார்' என்பதை நினைத்தால் மனம் பதறுகிறதே? இவரால் எம்.ஜி.ஆரைக் காப்பாற்ற முடியுமா?

இவருக்குச் சுதந்தரத்தின் -- சுயாட்சியின் -- சனநாயகத்தின் ஏ. பி. சி. யாவது தெரிந்திருந்தால், 235-க்கு 190 பேர் சட்டசபை உறுப்பினர்களைக் கொண்ட அரசாங்கத்தைக் கலைத்துவிட்டு மத்திய அரசாங்கம் அரசோச்ச வேண்டும் என்று சொல்ல முடியுமா?

இராஜாஜி (காங்கிரசு) ஆட்சியில் பொதுமக்கள் 100-க்கு 7 பேர் படித்திருக்கும் நாட்டில் -- சுமார் 6,000 பள்ளிக்கூடம் உள்ள நாட்டில், 2,600 பள்ளிகளை மூடின யோக்கியர்தான் இவர்!

1952 ல் மெஜாரிட்டி இல்லாமல் பதவியில் வந்து உட்கார்ந்து கொண்டு, 100-க்கு 15 பேர்களே படித்திருக்கும் நாடான நம் நாட்டில் இருந்த 12 000 பள்ளிகளில் 6000 பள்ளிகளை மூடி, 'மாணவர்கள் ஒரு வேளைதான் படிக்க வேண்டும் -- மறுவேளை சாதித் தொழில் செய்ய வேண்டும்' என்று உத்தரவு போட்டதன் விளைவாகவும் அரசியல் வாழ்விலிருந்தே வெளியேற்றப்பட்டவர்தானே இவர்?

இவரது அரசியல் நாணயத்தை எடுத்துக்கொண்டாலும், 'மாதம் ரூ 500 க்கு மேல் சம்பளம் வாங்கமாட்டோம்' என்ற கட்சி[illegible] கொள்கையை முடித்துக்கொண்டிருந்தார்கள்; பதவிக்கு வந்த[illegible] மாதம் ரூ. 20,000 சம்பளம் வாங்கி பல பல இலட்சம் ரூபாய் [illegible] சொத்துக்காரராக இருக்கும் தியாகிதானே இவர்!

இவர் அரசியல் -- சமுதாய வாழ்வில் எதில் நேர்மையாய் [illegible] யோக்கியமாய் நடந்துகொண்டு இருக்கிறார்? பொதுமக்களுக்கு [illegible]அறிவு சொல்ல இவருக்கு எதில் -- என்ன யோக்கியதை இருக்கிறது[illegible]

அயோக்கியத்தனமான பத்திரிகைகளின் ஆதரவு இருக்கிறது[illegible]ன்பதாலும், தன்னிடம் பத்திரிகைகள் இருக்கின்றன என்பத[illegible]ம் ஒரு மனிதன் எந்த அயோக்கியத்தனத்தையும் செய்யலாமா? [illegible] தாலும், மடையனும் -- அயோக்கியனும் -- துரோகிப் பயல்[illegible]ம் தான் அதனைச் சரி என்று சொல்வார்கள்; யோக்கியர்கள் [illegible]த்துத்தான் கூறுவார்கள்!

ஏன் இவ்வளவு வேதனைப்பட்டு எழுதுகிறேன் என்று 'கருணா[illegible]தி ஆட்சி விலகிவிட வேண்டும் அல்லது விலக்கப்பட வேண்[illegible]ம்' என்று சொன்னால்--அப்படிச் சொல்லும் கருத்தையும் தெரிந்[illegible]--மனம் பதறுமா பதறாதா?

அயோக்கியத்தனத்திற்கு எல்லை இல்லை என்றால், மனித சமு[illegible]ய நல்வாழ்வில் அக்கறை கொண்டவர்களுக்கு மனம் பதறு[illegible] -- வெடிக்காதா என்று கேட்கிறேன்.

எனவே மக்களே -- நீங்கள் அவற்றை மதிக்கமாட்டீர்கள்; [illegible]என்றாலும் உங்கள் வெறுப்பை அவர்களுக்குக் காட்டுங்கள் [illegible]என்று வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்."

—'விடுதலை' தலையங்கம் : 16—[illegible]—72

அண்ணா படத்தையே உடைக்க முனைந்[illegible]னர்

'அர்த்தால்' என்ற பெயரில் வெறிச் செயல்

கள்ளக்குறிச்சியில் 15-11-72 அன்று கழகத் தோழரும் -- தென்னாற்காடு மாவட்ட தி. மு. கழக உறுப்பினருமான கி. வேணு, தமது அண்ணா உணவு விடுதியை மூடாமல் இருந்தார்.

கடையை அடைக்கும்படி காலிகள் கூட்டமாக வந்து வற்புறுத்தினர்; 'எக்காரணத்தை முன்னிட்டும் கடையை மூடமாட்டேன்' என அவர் மறுத்துவிட்டார்.

அந்தக் கூட்டத்தினர் பேரறிஞர் அண்ணா உருவப் படத்தைக் கழற்றி அண்ணாவின் பெய[illegible]ள போர்டைக் கழற்றி இர[illegible]வும் முயற்சித்ததுடன், வன்மு[illegible]யில் ஈடுபடவும் முனைந்தனர்.

காவல் துறையினர் விரை[illegible]து வந்து நிலைமையைச் சமா[illegible]தனர்; காலிகளின் வன்முறை வெறிச் செயல் தோற்றது.

நிலைமையைக் கண்ட பொது மக்கள், 'அண்ணாவின் பெயரைச் சொல்லிக்கொண்டு இப்படிப்பட்ட வெறிச் செயல்களில் இறங்கினார்களே -- உத்தமரின் பெயருள்ள போர்டையும் -- படத்தையும் கழற்றவும் உடைக்கவும் முயற்சித்திருக்கிறார்களே' என்று மனங் குமுறிக் கூறினர்.

ஆசிரியருக்கு மடல்

அர்த்தால் என்ற பெயரில் காலித்தனம்

ஐயா,

15-11-72 காலை சுமார் 11 மணி அளவில், 'அர்த்தால்' என்ற பெயரில் எம் ஜி ஆர். கட்சியினர் எங்கள் மன்றத்திற்கு வந்து, மன்றத்தில் மாட்டப்பட்டிருந்த கலைஞரின் படத்தையும்--மன்றத்தையும் தாக்கியதுடன் வன்முறைச் செயல்களிலும் ஈடுபட்டனர்.

சிறிது நேரம் கழித்து நாங்கள் மீண்டும் புதிய படங்களை மாட்டினோம்; சுமார் 12 30 மணியளவில் மேலும் பலர் (எம்.ஜி.ஆர். ரசிகர்கள்) கழகக் கொடி மரத்தை ஒடித்து--கொடியைக் கிழித்தெறிந்ததுடன், எங்கள் மன்றத்தில் மாட்டியிருந்த தந்தை பெரியார் -- அண்ணா -- கலைஞர் -- நாவலர் -- எஸ்.எஸ்.ஆர். ஆகியோர் படங்களை நொறுக்கியதுடன், மன்றத்தையும் தாக்கி வெறிச் செயலில் ஈடுபட்டனர்.

இத்தகைய வன்முறைச் செயல்களால் அருகில் திறந்திருந்த கடைக்காரர்கள் அச்சமடைந்து தங்கள் கடைகளை மூடிவிட்டனர்.

பின்பு அந்தக் கும்பல், 9-வது வட்டத்திலிருந்த பல கழகக் கொடி மரங்களை ஒடித்தும் -- கொடிகளைக் கிழித்தும் ஆர்ப்பாட்டம் செய்தது.

'அமைதியான முறையில் அர்த்தால் நடைபெறும்' என்று சொல்லிவிட்டு இதுபோன்ற வன்முறையில் அவர்கள் ஈடுபட்டதால், அர்த்தால் தோல்வியடைந்ததை நல்ல உள்ளம் கொண்ட திண்டுக்கல் நகர மக்கள் உணர்ந்துவிட்டனர்.

மூ. மாரியப்பன்
செயலாளர்,
சவுந்தரபாண்டியனார்
நினைவு மன்றம், திண்டுக்கல்.

அமைதியான அர்த்தாலா?

ஐயா,

15—11—72-ல் நான், என் கடையைத் திறந்துவைத்து பழம் -- தேங்காய் வியாபாரம் செய்து கொண்டிருந்தேன்; அன்று காலை சுமார் 11-30 மணியளவில், 'அர்த்தால்' என்று சொல்லிக்கொண்டு ரோட்டில் ஒரு கும்பல் வந்தது; அந்தக் கும்பலில் இருந்த ஆலச்சம்பாளையம் கவுன்சிலர் கோபால் என்பவர், கடையை மூடும்படி என்னைக் கேட்டார்; நான், 'என் கொள்கைக்கு ஒத்து வராது; அதனால் கடையை மூடமாட்டேன்' என்று சொன்னேன்; 'கடையை மூடத்தான் வேண்டும்; இல்லாவிட்டால் கடையைச் சூறையாடுவோம்' என்று சொன்னார்.

நான் கடையை மூடவில்லை; உடனே அவர், 'சூறையிடுங்கடா' என்று தன்னுடன் வந்தவர்களிடம் சொல்லிவிட்டு, கடையின் தட்டியைப் பிய்த்தெறிந்தார்; வன்முறைக் கும்பல் தட்டியைத் தூள் தூளாக்கியது; கடையிலிருந்த பழங்களையும் -- தேங்காய்களையும் கோபாலும் அவர் கும்பலும் எடுத்துச் சென்றுவிட்டு, எனக்கு நட்டத்தை ஏற்படுத்திவிட்டனர்; இதுதான் அமைதியான அர்த்தாலா? மக்கள் கருத்தை எதிரொலிக்கும் அர்த்தாலா இது?

சேட்டு டி. மூர்த்தி
நகர தி.மு.க செயலாளர்,
இடைப்பாடி.

புதுக் கட்சியினரின் விஷமத்தனம்

வெங்கலம் மணி மறுப்பு

"பெரம்பலூரில் நடக்கவிருக்கும் புதுக்கட்சிக் கூட்டத்தில் நானும் பேசுவதாக என்னைக் கேட்காமலே விளம்பரம் செய்து விட்டனர்: அந்தக் கட்சிக்கும் -- எனக்கும் எவ்வித தொடர்பும் இல்லை"

என்று, முன்னாள் வெங்கலம் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் எஸ். மணி அறிவிக்கிறார்.

பத்தமடையில் அர்த்தால் பிசுபிசுத்தது

பத்தமடை, நவ. 15—

"கழகத் தோழர்களின் வேண்டுகோளுக்கிணங்க பத்தமடையில் பெரும்பாலான கடைகள் திறக்கப்பட்டு, வியாபாரம் நடைபெற்றது; அர்த்தால் பிசுபிசுத்தது"

என்று, தி. மு. க. செயலாளர் ந. பரமசிவம் அறிவிக்கிறார்.

அர்த்தால் தோல்வி

"எங்கள் ஊரில் 15—11—72 அன்று ஏதும் அர்த்தால் நடைபெறவில்லை; காலை 10 மணி அளவில் அண்ணா புதுக் கட்சியினர் சுமார் 20 பேர் கடைகளை அடைக்கும்படி கூறினர்; தி. மு. க. தோழர்கள் சுமார் 15 பேர் கடைகளைத் திறக்கும்படி கூறினர்; கடைகள் ஒரு நிமிடம்கூட அடைக்கப்படவில்லை; அர்த்தால் இங்கு தோல்வியடைந்தது; வழக்கம்போல்கடைகளில் வியாபாரம் நடைபெற்றது"

என்று, புஞ்சை சங்கேந்தித்தோழர் ந. துரைராசன் அறிவிக்கிறார்.

கொதிக்கின்ற வரையில் கொதித்து அடங்கட்டும்

'பொறுமை' என்னும் குளிர்நீ[illegible]த் தெளிப்போம்

"அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்ட கழகத்திற்கு ஒன்று ஏதோ ஆபத்து வந்துவிட்டது — சோதனை வந்துவிட்டது — என்றெல்லாம் நண்பர்கள் பேசினார்கள்; அப்படிப்பட்ட சூழ்நிலை உருவான அன்றே 'இதெல்லாம் பத்து நாள் பரபரப்புதான் — அதற்குப் பிறகு அடங்கிவிடும்' என்று சொன்னேன்.

"பேசிய நண்பர்களில் சிலர், 'கழகத் தலைவர் அவர்களே — கொஞ்சம் நீங்கள் எங்களைக் கட்டவிழ்த்துவிடுங்கள் -- எங்களைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்காதீர்கள் -- பொறுமை, பொறுமை என்று போதனை செய்யாதீர்கள்' என்றெல்லாம் பேசினார்கள்.

உலை கொதிக்கின்ற நேரத்தில் கொஞ்சம் கவனக் குறைவாக இருந்தால் பொங்கி வழியும்; அப்படிப் பொங்கி வழிகின்ற நேரத்தில், தாய்மார்கள் ஆத்திரப்பட்டு — அவசரப்பட்டு எதுவும் செய்யமாட்டார்கள்; அது கொதிக்கிறது என்பதற்காக அவர்களும் கொதிக்க மாட்டார்கள்; கொஞ்சம் குளிர்ந்த தண்ணீரை எடுத்துத் தெளிப்பார்கள்; கொதி அடங்கும்!

"அதைப்போல், இன்று தமிழகத்தில் ஏற்பட்டிருக்கின்ற இந்தக் கொதியை அடக்க நாம் பொறுமையாக இருக்கவேண்டும்.

"தாய்மார்கள் கற்றிருக்கின்ற இந்த வித்தையை, கழகத்திலிருக்கின்ற அண்ணாவின் தம்பிமார்களும் கற்றுக்கொள்ள வேண்டும்.

"அவர்கள் கொதிக்கிறார்கள் என்று நாமும் கொதிக்கிறோம் என்றால், எவ்வளவு பெரிய பொறுப்பைத் தமிழ்நாட்டு மக்கள் நம்மிடம் தந்திருக்கிறார்கள் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்."

— முதலமைச்சர் கலைஞர்

(மாணம்பதி அண்ணா சிலைத் திறப்புவிழாவில்)

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டம்

22—11—72

இடைப்பாடி

நகர தி. மு. க. சார்பில் மாலை 6-30 மணிக்கு பேருந்து நிலையத் திடலில்; தலைவர்: தா. அருணாசலம்; பேசுவோர்: செ. கந்தம்பன் எம்.எல்.ஏ., அ. ஆறுமுகம், நா. நடேசன் எம்.சி., ஆர். வி. [illegible] பழ. பெரியசாமி, சேட்டு [illegible] முத்து, ஆ. கருமலை எம். சி., வெ. கும்பதாசன் எம்.சி., ம.செங்கோட்டன் எம்.சி. மற்றும் பலர்.

சென்னை 8 வது வட்டம்

தி. மு. க. ஆதரவாளர்கள் சார்பில் மாலை 7 மணிக்கு இராயபுரம் மனைமரத் தொட்டி அம்மன் கோயில் எதிரில்; தலைவர்: கு. மாலு; பேசுவோர்: திருப்பத்தூர் இராமமூர்த்தி, நடிகர் ஒ. ஏ. கே. தேவர், எஸ்.பி.சற்குணம் எம்.சி., இரகுமான் கான், வலம்புரி ஜான், என்.வி.என். செல்வம், மு.வேதாசலம் எம்.எல்.ஏ., இரா. மு. மனோகரன் எம்.சி., பி. ஏ. என். இராசரத்தினம், ம. பொன்னுரங்கம், கு. இராமலிங்கம், சு. இராமதாசு, க. இருசப்பன்.

மின்துறை அமைச்சர்

ஓ. பி. இராமன்

நிகழ்ச்சிகள்

நவ. 22: மதுரை — மேலூர் தெற்குத் தொகுதி நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளுதல்.

நவ. 23: வட மதுரைத் தொகுதி நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளுதல்.

சொல்லற்றவர்கள் கல் வீசுகின்றனர்

உத்திரமேரூர், நவ. 21—

உத்திரமேரூரில் ரூ 8,75 000 செலவில் கட்டப்பட்டுள்ள அரசினர் பெண்கள் உயர்நிலைப் பள்ளிக் கட்டடத் திறப்பு விழாவும் ரூ 22 இலட்சம் செலவில் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டத் திறப்பு விழாவும் -- 1029 பேருக்கு பட்டா வழங்கு விழாவும் நடைபெற்றன.

விழா முடிந்து வெளியே வரும்போது முதல்வரின் கார்மீது [illegible]ள் ஒளிந்திருந்து கற்களை வீசினர்; ஒரிரு கற்கள் கார்மீது விழுந்[illegible]

இந்த நிகழ்ச்சி பற்றிக் குறிப்பிட்டு, அடுத்து நடந்த மாணம்பதி பொதுக்கூட்டத்தில் முதலமைச்சர் பேசியதாவது:—

"வருகின்ற வழியில் நல்ல பல நிகழ்ச்சிகளையெல்லாம் முடித்துவிட்டு--மக்களுடைய பேராதரவைப் பெற்று -- வாழ்த்து முழக்கங்களையெல்லாம் கடந்து வரும்போது, யாரோ நான்கு பேர் கார்மீது கல் வீசினார்கள் என்பதற்காக நண்பர்கள் ஆத்திரப்பட்டார்கள்.

அவர்கள் கல்லை வீசாமல் வேறெதை வீசுவார்கள்--- சொல்லையா வீசுவார்கள்? சொல் இருந்தால் அல்லவா அதனை வீசுவதற்கு?

அவர்களிடம் இருப்பது கல்--- ஆகவே, வீசுகிறார்கள்; அவர்களால் சொல்லை வீசமுடியவில்லை!

அவர்கள் வீசுகின்ற சொற்களெல்லாம், அண்ணா அவர்கள்மீது எதிரிகள் என்ன சொற்களை-- பழிச் சொற்களை -- இழி சொற்களை வீசினார்களோ, அப்படிப்பட்ட சொற்கள்தான் இன்று கழகத்தின்மீது வீசப்படுகின்றன!

அண்ணா அவர்கள், 'எதையும் தாங்கும் இதயம் வேண்டும்' என்றார்; நாம் அந்த வழியில் இருக்கிறோம்."

மதியழகன் பதவி...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

சர்ச்சைக்குரிய பேச்சை ஒரு சபாநாயகர் மேற்கொள் காட்ட முடியாது; இப்படிச் சொல்வதன் மூலம், நிகழ்ச்சிகளைப் பற்றிய தம் சொந்த விளக்கத்தை அவையின்மீது அவர் திணிக்கிறார்.

அவர் கடைபிடிக்கும் இந்த முறையிலிருந்து, 'சட்டமன்ற சனநாயகத்தை அவர் மதிக்கிறார்' என்று கருத முடியவில்லை; தமக்கு எதிரான இரு நம்பிக்கையிலலாத தீர்மானங்களுக்கும் -- சட்டமன்றக் கூட்ட ஒத்திவைப்புக்கும் தொடர்பு இல்லை' என்று அவர் கூறுவதை நம்ப முடியவில்லை!

இப்போதுள்ள நிலைமைகளைப் பார்த்தால், மறுபடியும் சட்டமன்றம் கூடுகின்ற நேரததில அதை அவர் மீண்டும் ஒத்திவைக்கக் கூடுமென்றும், மாநிலத்தில் சட்டமன்ற அலுவல்கள நடைபெறாது இருக்கும்படியான ஒரு சூழ்நிலையை அவர் உருவாக்க நேரிடுமென்றும் தெரிகிறது.

இதற்கிடையில் திரு. எம். ஜி. இராமச்சந்திரனின் ஆதரவாளர்கள்—மத்திய அரசு தலையிடுவதன் மூலம் புதிய தேர்தல்கள் வரலாம் எனறு நம்பிக்கொண்டு கிளர்ச்சிகள் நடத்திக் கலவரச் சூழ்நிலையை உருவாக்கக்கூடும்.

எதிர்க் கட்சிகளுக்கு அத்தகைய ஆசைகள் இருக்கலாம்; ஆனால் ஒரு சபாநாயகராக இருபபவர் அதற்கெல்லாம் உடந்தையாக இருப்பது சகித்துக் கொள்ள முடியாததாகும்.

'ஆளுங் கட்சியானது சட்டமன்றத்துக்கு வெளியே கூடி எனக்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற்றிவிட்டதே--இது கொடுஞ் செயலல்லவா' எனகின்ற மதியழகனிடத்தில் நமக்கு அனுதாபம பிறக்கவில்லை!

சட்டமன்றக் கூட்டம் திடீரென்று ஒத்திவைக்கப்பட்டதால் ஆளும் கட்சி அப்படி வெளியே கூட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

ஒரே ஒரு எம்.எல்.ஏ. நமபிக்கை யில்லை என்று தெரிவித்தாலும், உடனே பதவியிலிருந்து இறங்கிவிடத் தயாராக இருப்பதாகத் திரு. மதியழகன் தெரிவித்தார்; இவரிடத்தில் நம்பிக்கையில்லை என்பதற்கு ஒருவர் இருவரல்ல— 182 பேர்களின் எழுத்துப்பூர்வமான அத்தாட்சி அவர் கையிலே இருக்கிறது.

பெரும்பான்மையினரின் கருத்துகளை மதிப்பளித்துப் பதவியிலிருந்து அவர் விலகிவிடலாம்; அப்படிச் செய்தால், துணை சபாநாயகர், அவைக்கூட்டத்தைக் கூட்டிடுவார்; அப்படி இல்லையேல், முதலமைச்சர், சட்டமன்றத்தைக் கலைத்திடக் கோருவார்; அவர்களது சந்தேகத்துக்கிடமான நடவடிக்கைகளின் நோக்கமும் அதுதானே!"

கல் வீசுகின்றனர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிரசு ஆட்சி தமிழகத்தில் இல்லையே; எனவே, எப்படியாவது கழக ஆட்சி வன்முறையினால் -- ஊழல் குற்றச்சாட்டால் கவிழாதா -- கவிழ முடியாதா என்று பார்க்கிறார்கள்!

அப்படியயே பார்த்தாலும், தமிழ்நாட்டில் இரண்டு கட்சிதான உண்டு; ஒன்று தி.மு.க. -- மற்றொன்று காமராசர் தலைமையிலான காங்கிரசு அணி; அவர்களுக்கு (காமராசர் காங்கிரசுக்கு) எங்கள் கட்சி மாற்று அணி; எங்களுக்கு அவர்கள் கட்சி மாற்று அணி; இந் நிலையில், தி. மு. க. ஆட்சி கவிழ்ந்தால் -- சுப்பிரமண்யம் நினைக்கிறபடி -- தமிழகத்தில் அவர்களுடைய கட்சி ஆட்சிக்கு வர முடியாது!

எம். ஜி. ஆர். கட்சியும் -- வலது கம்யூனிஸ்டுக்கட்சியும்சேர்ந்து கொண்டு 'கலவரம் ஏதாவது நடக்காதா -- அதன் மூலம் ஆட்சி கவிழாதா' என்று பார்க்கிறார்கள்; இதில் மறைமுகமாகத் தூண்டிவிடும் முயற்சியில் கம்யூனிஸ்டுக் கட்சி ஈடுபட்டு, 10 இடங்களில் துப்பாக்கிச் சூடு நடந்து -- அதன் காரணமாக 50 பிணங்கள் விழுந்து -- சட்டம் -- ஒழுங்கு குலைந்தது என்று டில்லி தலையிடாதா' என்று பார்க்கிறது; இதற்கு எம். ஜி. ஆர். கட்சி துணை போகிறது!

வரிகொடா இயக்கம்' பற்றி எம். ஜி. ஆர். கூறியிருக்கிறார்; தாமே வரி பாக்கி உள்ளவர் இந்த வரிகொடா இயக்கத்தை நடத்தச் சொல்வதில் வியப்பில்லை!

'தி மு. க. கழக எம்.எல்.ஏ.-க்களின் வீட்டிற்குப் பொது மக்கள் ஊர்வலமாகச் சென்று கோரிக்கை மனுக்கொடுப்பது என்பது போராட்டத்தின் கட்டம்' என்று எம். ஜி ஆர். கூறியிருக்கிறார்; தி. மு. கழக ஆட்சியைக் கவிழ்க்கச் செய்வதற்காக வன்முறையைத் தூண்டிவிடும் முயற்சிகளே இவைகளாகும்!

"தி. மு. கழக அமைச்சரவை மீதுஊழல் புகார்கள் பூச்சாண்டியைக் கிளம்பும் முந்தைய முயற்சிகள் தோல்வியடைந்துவிட்டன என்பது தெரியாததலால், இந்தப் புது; கிளர்ச்சி பற்றிப் பேசப்படுகிறது."

982 கிணறுகள் தோண்டப்பட்டன

புதுடில்லி, நவ. 20—

எண்ணெய் எரிவாயுக் கமிஷன் சென்ற செப்டம்பர் மாதம் முடிய நாடு முழுவதுமாக 982 கிணறுகளைத் தோண்டியிருக்கிறது.

இவற்றில் 597 கிணறுகளில் ஹைட்ரோ கார்பன்கள் இருப்பது தெரிய வந்துள்ளது; 266 கிணறுகள் வறண்டனவாகப் போயின; 26 தண்ணீர்க் கிணறுகளாய் உள்ளன; மீதமுள்ள 93 கிணறுகள் சம்பந்தப்பட்ட ஆய்வுகள் இன்னும் முடிவு பெறவில்லை.

அறநிலைய அமைச்சர்

மு. கண்ணப்பன்

நிகழ்ச்சிகள்

நவ. 23 காலை: திண்டுக்கல்; முற்பகல் முதல் பிற்பகல் வரை: மின்துறை அமைச்சர் கலந்து கொள்ளும் (வட மதுரைத் தொகுதிச் சட்டப் பேரவை உறுப்பினர் திரு. நாகராசன் அவர்கள் ஏற்பாடு செய்யும்) நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளுதல்.

தொழிற் சங்கத் தலைவர் எஸ். ஆர். வாசவதா மறைவு

ஆமதாபாத், நவ. 21—

தொழிற் சங்கத் தலைவரும் நாடாளுமன்ற மேலவை உறுப்பினருமான எஸ். ஆர். வாசவதா நேற்று மாலை இங்குள்ள வி. எஸ். மருத்துவமனையில் மாரடைப்பால் மரணமடைந்தார்.

தொழிலில் சுமூக உறவை ஏற்படுத்துவதில் சிறந்த பணியாற்றியதற்காக 1968 ல் அவருக்கு 'பத்மபூஷண்' விருது அளிக்கப்பட்டது.

1969-ல் தேசியப் பஞ்சாலைக் கார்ப்பொரேஷன் அமைக்கப்பட்டபோது அதன் முதல் தலைவராக நியமிக்கப்பட்டார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, [illegible] அச்சகத்தில் [illegible] இது வெளியிடப்படுகிறது.

முஸ்லிம் வியாபாரியை உயிரோடு எரிக்க முயற்சி

அர்த்தால் அன்று கடைதிறந்து வைத்திருந்தவருக்கு நேர்ந்த கதி

கம்யூனிஸ்டு -- ரசிகர் கும்பலின் வெறியாட்டம்

மதுரை, நவ. 21—

15—11—72 அன்று எம். ஜி. ஆர். கட்சியினரும்--வலது கம்யூனிஸ்டுக் கட்சியினரும் நடத்திய அர்த்தாலின்போது கடையைத் திறந்துவைத்து வியாபாரம்செய்த ஒரு வியாபாரியை உயிருடன் எரிப்பதற்கு நடைபெற்ற முயற்சி பற்றித் தகவல் கிடைத்திருக்கிறது

அந்த வியாபாரியின் பெயர் இப்ராகீம் சா; வயது 55; இராமநாதபுரம்–கீழக்கரையைச் சேர்ந்தவர்; அங்கு பலசரக்குக் கடை வைத்து வியாபாரம் செய்து வந்தார்.

அர்த்தால் அன்று வியாபாரம் செய்ததால், சில எம் ஜி.ஆர். ரசிகர்கள் அவருடைய கடைக்கு சென்று அவர்மீது பெட்ரோல் ஊற்றித் தீ வைத்தனர்; இதனால் அவரது உடல் கருகியது; இரு கால்களிலும் -- இடது கையிலும் பலத்த காயம் ஏற்பட்டது; உடனே அவர் மருத்துவமனையில சேர்க்கப்பட்டார்; அங்கு உயிருக்கு ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இதன் தொடர்பாகப் போலீசார் வழக்குப் பதிவு செய்து, குமாரவேல் என்பவரைக் கைது செய்தனர்; மற்றும் டிரைவர் அடிமை -- பாலகிருஷ்ணன்--சிதம்பரம் -- நமசிவாயம் ஆகியோரைப் போலீசார் தேடிவருகின்றனர்.

விக்கிரமசிங்கபு[illegible]த்தில்

விக்கிரமசிங்கபுரத்தில் உள்ள மதுரை மில் மீது [illegible]ம் ஜி.ஆர். ஆதரவாளர்கள் [illegible]க்குதல் நடத்தினர்; கண்[illegible] சன்னல்களை உடைத்து ரூ. [illegible],000 மதிப்புள்ள சொத்துக்களைச் சேதப்படுத்தினர்.

விக்கிரமசிங்கபுரம் ஊராட்சி மன்றத் தலைவர் அனந்தகிருஷ்ணன் வீட்டைச் சூழ்ந்துகொண்டு கல் வீசி சன்னல்களை உடைத்தனர்.

வீட்டின் பின்புறம் இருந்த வைக்கோல் போருக்குத் தீ வைத்தனர்.

அருகில் இருந்த சிவாஜி கணேசன் மன்றத்தைத் தாக்கிக் கதவுகளை உடைத்து அங்கிருந்த எல்லாம் பொருள்களுக்கும் தீ வைத்தனர்.

அதன் அருகில் இருந்த கடிகாரம் பழுது பார்க்கும் கடையையும் தாக்கி அங்கிருந்த கடிகாரங்களுக்கும் மற்ற சாமான்களுக்கும் தீ வைத்தனர்.

தி. மு. கழகக் கொடி பறந்து கொண்டிருந்த கொடிக் கம்பத்தை வெட்டிச் சாய்த்தனர்.

இந்த நிகழ்ச்சிகள் தொடர்பாகப் போலீசார் வழக்குகள் பதிவு செய்துள்ளனர்.

பேருந்துமீது தாக்குதல்

18-ந் தேதி தி. மு. கழகத்தவரும்-எம். ஜி. ஆர். கட்சியினரும் விக்கிரமசிங்கபுரத்தில் கூட்டம் நடத்த அனுமதி கோரியிருந்தனர்.

15-ந் தேதி நடந்த வன்முறைச் சம்பவங்களின் தொடர்பாக இரு கட்சியினருக்கும் கூட்டம் நடத்த அனுமதி மறுக்கப்பட்டது.

அன்றிரவு தமிழக அரசுத் துரிதப் பேருந்து வண்டியை எம்.ஜி.ஆர். ரசிகர்கள் தாக்கிக் கலவரம் செய்தனர்.